1993 பிப்ரவரி 13]   [பேரவைத் தலைவர்]

நீக்கப்படுகிறது. வேண்டாம் (குறுக்கீடு) முடியப் போகும் போது அரசியல் விவாதத்துக்கெல்லாம் ஏன் போகிறீர்கள்? அது பற்றி எனக்கு எந்தத் தகவலும் இல்லை.

பிற்பகல் 12-30

விவாதம் முடிவுற்றது. ''1993-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4-ஆம் நாளன்று சட்டப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'' என்று மாண்புமிகு திரு. சு. சந்திரராஜன் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

4. தமிழ் நிகழ்ச்சிகளைச் சென்னைத் தொலைகாட்சியில் இரவு 9-00 மணி வரை ஒளிபரப்பவும், மாநில மொழிக்கு மாநிலத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அரசைக் கோரும் தீர்மானம் 10-2-1993 ஆம் நாளன்று நிறைவேறியது பற்றி வெளியே தெரிவிக்கப்பட்ட செய்திகள் குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் தீர்மானம் இப்போது நிறைவேறி இருக்கிற காரணத்தால், தீர்மானம் நிறைவேறியது எப்படி என்கிற ஒரு விளக்கம் நான் அளிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். வெளியில் என்மீதே பழி சுமத்துகிற வகையில், சில செய்திகளைச் சிலர் வெளியிட்டிருக்கிறார்கள். தீர்மானம் எல்லாம் போட்டிருக்கிறார்கள் என்று எல்லாம் செய்திகளைப் பார்த்து இருக்கிறேன். அதில் தெரிவித்து இருக்கிற ஒரு கருத்து இங்கே இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேறியது. விதிகளுக்கு புறம்பாகவும், இன்னும் அதிகமாகவும் போய், அரசியல் சட்டத்திற்கே புறம்பாகவும் பேரவைத் தலைவர் நிறை வேற்றினார் என்கிற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். யாரேனும் ஒருவர் முன்மொழிந்தவர், இன்றி இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினாரா

இரவு 9.00 மணி வரை ஒளிபரப்பவும் மாநில மொழிக்கு மாநிலத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அரசைக் கோரும் தீர்மானம் 10-2-1993 ஆம் நாளன்று நிறைவேறியது பற்றி வெளியே தெரிவிக்கப்பட்ட செய்திகள் குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

[பேரவைத் தலைவர்] [1993 பிப்ரவரி 13

அல்லது யாராவது அமைச்சர்கள் கோரினார்களா ஓட்டெடுப்புக்கு விடவேண்டுமென்று யாரேனும் கோரினார்களா, அப்படிக் கோராத வகையில் பேரவைத் தலைவராகவே அந்தத் தீர்மானத்தை ஓட்டெடுப்புக்கு விட்டது என்பது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது, விதிகளுக்கும் புறம்பானது என்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது விரிவாக எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிற காரணத்தால் தெரிவிக்கிறேன். இங்கேயும் இன்று எப்படி ஒரு தீர்மானம் நிறைவேறுகிறது என்பதற்குரிய வகையில் இங்கே ஒரு விவாதம் நடந்து, இப்போது தீர்மானம் நிறைவேறி இருக்கிற காரணத்தால் தீர்மானம் நிறைவேறுவது என்பது இப்படித்தான் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன. திரு. காந்திராஜன் திரும்ப எழுந்து என்னுடைய தீர்மானத்தை ஓட்டெடுப்புக்கு விடுங்கள் என்று இப்பொழுது கேட்கவில்லை. இங்கே விவாதம் நடந்தது. விவாதம் நடந்ததற்குப் பிறகு கடைசியில் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதிகூட சில பிரச்சினைகளைக் கிளப்பினார். நான் சிலவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். அதோடு விவாதம் முடிந்தது என்று சொல்லிவிட்டு நான் தான் இதை அவையின் முடிவுக்கு விட்டு இருக்கிறேனே தவிர, திரு. காந்திராஜன் திரும்ப எழுந்து இதை அவையின் முடிவுக்கு விட்டு, வாக்கெடுப்புக்கு விட வேண்டுமென்று கேட்கவில்லை. அதைப் போலத்தான் அன்றைக்கும் நடந்தது. இப்பொழுது எப்படி முடியப் போகிற நேரத்திலே மாண்புமிகு இளம்வழுதி அவர்கள் சில பிரச்சினைகளைக் கிளப்பி நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கினேனோ, அதே போல அன்றைக்கும் விவாதம் நடந்து கொண்டிருக்கிற போது, சிலபல பிரச்சினைகள் இங்கே ஏற்பட்டு சிலவற்றை நான் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கிவிட்டு, அடுத்து விவாதம் முடிவுற்றது, தீர்மானத்தை பேரவையின் முடிவுக்கு விடுகிறேன் என்று நான் முடிவுக்கு விட்டு, பேரவையில் ஏற்போர் :ஆம்' என்று நான் கேட்டவுடன், 'ஆம்' என்கிற குரல் வேறு எல்லாக் குரலையும் விட அதிகமாகக் கேட்ட காரணத்தாலும், 'இல்லை' என்கிற குரல் கொஞ்சம் மட்டமாகவே கேட்டதாலும் (குறுக்கீடுகள்) 'இல்லை' என்பதே இருக்கலாம். 'இல்லை' என்று சொன்னால் அவர்கள் கேட்பதற்கு பதில் விதியிலே இருக்கிறது. 'இல்லை' என்றே சிலர் சொல்லியிருக்கலாம். நான் அப்போது இல்லை என்போர் குறைவு என்று சொன்ன நேரத்தில், யாரும் இல்லையென்று சொல்லவில்லை என்று அவர்களும் சொல்லவில்லை. எனவே, இல்லையென்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை சிலர் எதிர்த்து இருக்கிறார்கள் என்றுதான்

1993 பிப்ரவரி 15] [பேரவைத் தலைவர்]

பொருள். எதிர்த்தவர்களுடைய எண்ணிக்கை குறைவு. எனவே, திர்மானம் நிறைவேறியதாக நான் அறிவித்து இருக்கிறேன். இதை வெளியிலே போய் பேரவைத் தலைவா விதிகளுக்குப் புறம்பாகவும், அரசியல் சட்டத்திற்கே புறம்பாகவும், அந்தத் தீர்மானத்தை ஓட்டெடுப்புக்கு விட்டு நிறைவேற்றியது, பேரவைத் தலைவருடைய அத்து மீறல் என்பதைப் போலச் சொல்லியிருக்கிற காரணத்தால்தான், இப்பொழுது எப்படி தீர்மானம் நிறைவேறியது—தீர்மானம் என்கிறபோது, எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதற்கு விதி இருக்கிறது—இதோ விதி 97; ஒவ்வொரு தீர்மானமும் உறுப்பினர் ஒருவரால் முன்மொழியப்பெற்று மற்றொரு உறுப்பினரால் வழிமொழியப்பெற வேண்டும்; தீர்மானத்தை வழிமொழியும் உறுப்பினர், தமது உரையை விவாதத்தில் பிந்திய கட்டத்தில் ஆற்றலாம். அதனால்தான் விவாதத்தை வழிமொழிந்த உறுப்பினர் திரு. லாரன்ஸ் பின்னர் உரை யாற்றினார். வழிமொழியப்படாத தீர்மானம் உடனே கைவிடப் பெறும். எனினும் அமைச்சர் ஒருவரால் முன்மொழியப்பெறும் தீர்மானமோ, வரவு-செலவுத் திட்ட மானியக் கோரிக்கை எதையும் குறைக்க வேண்டுமென்ற தீர்மானமோ வழி மொழியப் பெறவேண்டியதில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அந்த இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தை முன்மொழிந்த காரணத்தால் அன்றைக்கு வேறு யாரும் வழிமொழியவில்லை. ஆனால் இது ஒரு உறுப்பினர் முன்மொழிந்த காரணத்தால் இன்னொரு உறுப்பினர் திரு. லாரன்ஸ் வழிமொழிந்தார். அதற்குப் பிறகு நிறைவேற்று வது என்பது வருகிறது, 99-வது விதி (1). ''அரசியல் அமைப்புச் சட்டத்திலோ, பிற சட்டங்களிலோ, இவ்விதி களிலோ—அதாவது இந்தப் பேரவையினுடைய விதிகளிலோ— வேறு விதமாக வகை செய்யப்பட்டாலன்றி ஒரு தீர்மானத் தின் மீதான விவாதம் முடிவுற்றதும் பேரவைத் தலைவர் பிரச்சினையை பேரவையின் வாக்கெடுப்புக்கு விட்டு குரல் வாக்கெடுப்பு மூலம் முடிவு சொல்ல வேண்டும். அப்போது தீர்மானத்தை ஏற்போர் 'ஆம்' என்றும், எதிர்ப்போர் 'இல்லை' என்றும் சொல்லுமாறு பேரவைத் தலைவர் கேட்டுக்கொள்ள வேண்டும்''. இதுதான் தீர்மானம் நிறை வேறுகிற முறை. இதே வகையில் தான் அன்றைக்கு இந்தி எதிர்ப்புத் தீர்மானமும் நிறைவேறியது. இதிலே பேரவைத் தலைவர் விதிமுறைகளுக்கு முரணாக எங்கே நடந்துகொண்டேன், அரசியல் சட்டத்திற்கு விரோதமாக எங்கே நடந்து கொண் டேன். தீர்மானம் போட்டுள்ள அவர்கள் பத்திரிக்கையாளர்

கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்கள், பார்வையாளர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்கள், என்று சொல்லியிருக்கிற காரணத்தால் நானும் தற்போது தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைக்கும் பத்திரிக்கையாளர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்கள், இன்றைக்கும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள், பார்வையாளர்களும அன்றைக்கும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள், இன்றைககும பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த விதி எஙகே மீறப பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் அறிந்துகொள்ளலாம். அதற்குப் பிறகு இதிலே என்ன குழப்பம் என்று கேட்டால் இங்கே சில சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்படுகின்றன. அப்படி சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்படுகின்றபோதுதான், அந்தச் சட்ட முன்வடிவுகள் பேரவையின் முடிவுக்கு விட்டதற்குப் பிறகு அது சட்டம் ஆக்கப்பட வேண்டும். "Bills should be made as acts" அதற்கு அப்போது அமைச்சர்கள் எழுந்து நிறைவேற்றப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை சட்டமாக்கித் தர வேண்டும் என்று கேட்பார்களே தவிர தீர்மானங்கள் நிறைவேற்றும்போது அப்படி அமைச்சர்கள் கேட்பது இல்லை. நிறைவேற்றப்பட்ட ஒரு சட்ட முன்வடிவை சட்டமாக்கித் தர வேண்டுமென்ற பிரச்சினை வருகிறபோதுதான் அமைச்சர்கள் எழுந்து கேட்பார்கள். ரொம்ப அதிகமாக விவரம் தெரிந்துவிட்டால் இந்த இரண்டையும் போட்டுக் குழப்பி என் தலையை உருட்டுவார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் இப்போது சிலரால் வெளியே பேசப்பட்டுவரும் பிரச்சினையாகும். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2-35

தீர்மானம் என்பது என்ன? சட்ட முன்வடிவு என்பது என்ன? இந்த இரண்டையும் குழப்புவதால்தான் இது வருகிறது. சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றுவதற்கு அரசியல் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தமட்டில் பேரவை விதிகள் தான் இருக்கிறதே தவிர அரசியல் சட்டத்தில் எதுவும் கிடையாது.

சட்ட முன்வடிவுகள் பற்றி என்ன அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இங்கே நிறைவேற்றபபடுகிற அந்தச் சட்ட முன்வடிவு சட்டமாக்கப்பட வேண்டியுள்ளதால்தான் அரசியல் சட்டப் பிரிவுகளில் தெரிவித்துள்ளவாறு அமைச்சர்கள் எழுந்து கேட்கிறார்கள்.

இரவு 9.00 மணி வரை ஒளிபரப்பவும் மாநில மொழிக்கு மாநிலத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அரசைக் கோரும் தீர்மானம் 10–2–1993 ஆம் நாளன்று நிறைவேறியது பற்றி வெளியே தெரிவிக்கப்பட்ட செய்திகள் குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

1993 பிப்ரவரி 13] [பேரவைத் தலைவர்]

அமைச்சர்கள் கேட்டுக் கொண்டதற்குப் பிறகு அதைப் பேரவை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு ஆளுநருக்கு அனுப்புகிறோம். ஆளுநர் அஸன்ட் கொடுத்த பிறகுதான் அது சட்டமாகிறது. ஆனால் தீர்மானத்தைப் பொறுத்தமட்டில் இந்த அவை எடுக்கிற முடிவுதான் இறுதியான முடிவு. அந்த வகையில் இப்போது இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நாம் ஆளுநருக்கு அனுப்புவது கிடையாது. நேரடியாக அவை முடிவு செய்திருக்கிறது. அவையின் சார்பில் அந்தத் தீர்மனைத்தை இப்போது தலைமைச் செயலாளருக்கு அனுப்பி தலைமைச் செயலாளர், சம்பந்தப்பட்ட மத்திய அரசுத் துறைக்கு அதை அனுப்பி வைக்கக் கேட்டுள்ளோம். எனவே தீர்மானம் நிறைவேறுவதற்கும், சட்டமுன்வடிவுகள் நிறைவேறுவதற்கும் இடையிலே இருக்கிற வேறுபாட்டை புரியாமல் பேரவைத் தலைவர் சட்டவிதிகளுக்குப் புறம்பாக நடந்து கொண்டிருக்கிறார் என்று வெளியிலே சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது நியாயமா என்பதை இன்றைக்கும் பார்த்துக் கொண்டிருக்கிற பத்திரிகையாளர்கள் விரிவாக எழுதி அவர்களுக்கும் புரிய வைப்பார்கள் என்று நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஏதாவது ஒரு முதியோர் கல்வித் திட்டத்தில் போய்க் கூட தெரியாத இரண்டு முதியோர்களுக்கோ, மூதாட்டிகளுக்கோ வாத்தியார் வேலை பார்க்கலாம். ஆனால் மெத்தப் படித்த மேதாவிகளுக்கு வாத்தியார் வேலை பார்த்து, இந்த விதிகளை எல்லாம் சொல்லித் தருவது தான் எனக்குக் கஷ்டமான வேலையாகத் தெரிகிறது. மேலும் ஒரு கருத்தை இன்றைக்குத் தீர்மானமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையும், என்னைப் பொறுத்தவரையில் நான் சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால் மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் பேச முற்பட்டதாகவும் அதற்கு அவர்கள் தடை செய்ததாகவும் தெரிவித்து நான் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்கிற ஒரு அபாண்டமான, நடக்காத ஒரு நிகழ்ச்சியை வெளியிலே சொல்லி தீர்மானத்தைப் போட்டு இருக்கிறார்கள். இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேறிய நேரத்தில் ஏற்பட்ட சலசலப்புகளை எல்லோரும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். அந்தச் சலசலப்பு நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து பேச முற்பட்டார் என்றோ, அதைத் தடை செய்தார்கள் என்றோ நிலைமையே இல்லை

அன்றைக்கு. அவர்கள் பேச எழுந்து இருந்தால், அவர்களாலே தடை செய்து இருக்க முடியாது என்பதும் அனைவருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-40

அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள், இப்படி விதிகளுக்குப் புறம்பாக மரபுகளுக்குப் புறம்பாக இத்தனை பேர்கள் எழுந்து நின்றுகொண்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே என்ற மன வருத்தத்தில் அவர்களைப் பார்த்து வேதனையோடு உட்கார்ந்திருந்தார்களே தவிர குறுக்கிட்டு எதுவும் பேசவேயில்லை என்பதும் அனைவருக்கும் தெரியும். எழுந்திருக்கக் கூட இல்லை. எனவே அவர்கள் எழுந்தபோது இவர்கள் தடை செய்தார்கள், அதற்காக நான் நடவடிக்கை எடுத்தேன் என்பதல்ல, அன்றைக்கு நடந்த சம்பவம். அன்றைக்கு 6 கோடி தமிழர்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கிற ஒரு தீர்மானம் நிறைவேறப் போகிறபோது, அந்தத் தீர்மானத்தை 60 பேர் கூடினால் தடுத்துவிட முடியும் என்ற முயற்சியிலே இறங்கினார்கள் என்பதை நான் உணர்ந்து கொண்ட நேரத்திலேதான், அவர்கள் பேச வேண்டிய அளவுக்கு விவாதத்திலே கலந்து கொண்ட காரணத்தினாலேதான், ''விவாதம் முடிவுற்றது. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தை பேரவையின் முடிவுக்கு விடுகிறேன்.'' என்று சொல்லி ஓட்டெடுப்புக்கு விட்டேன். இதுதான் நடந்த சம்பவம். இன்றைக்கு எதையாவது திசை திருப்பி பத்திரிகைகளில் எதையாவது கொடுத்து, எங்கேயாவது போய் நல்ல பெயர் வாங்கவேண்டுமென்ற கருத்தில் என்மீது பழி சுமத்த வேண்டியதில்லை என்பதைத்தான் இந்த பேரவையின் மூலம் இந்தச் செய்தியை அப்படிப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கும் சொல்கிறேன். அன்றைக்குத் தீர்மானம் முன் மொழியப்பட்டவுடன், இது ஒட்டுமொத்தத் தமிழர்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கிற தீர்மானம், எனவே, விவாதமின்றி ஒருமுகமாக நிறைவேற்றுவோம் என்று சொன்னேன். மற்ற தலைவர்களுக்கும் நான் செய்தி கொடுத்தேன். அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் பேசவேண்டும் என்று சொன்னவுடன், ஒரு தீர்மானத்தின் மீது விவாதம் வேண்டும் என்று கேட்டவுடன், நான் விவாதத்திற்கு அனுமதித்தேன். விவாதம் தொடங்கியது. விவாதம் தொடங்கியதற்குப் பின்னால்,

அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவிடாது தடுத்திட வேண்டும் என்ற உணர்வில், என்கின்ற முயற்சியில் அவர்கள் முயன்ற காரணத்தினாலேதான் மேற்கொண்டு விவாதத்தை நான் முடிவுக்குக் கொண்டு வந்து, பேரவையின் முடிவிற்கு தீர்மானத்தை விட்டு, அன்றைக்குத் தீர்மானத்தை நிறை வேற்றினேனே தவிர, பேச்சுரிமையைப் பறித்து அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. எல்லா உரிமையும் கொடுத்து, பேசுங்கள் என்று சொல்லி அவர்கள் பேசுகின்ற அளவுக்குப் பேசிவிட்டு, பிறகு மேற்கொண்டு பேச்சுக்கு இடமில் லாத நிலையில் தீர்மானத்தை நிறைவேற்றாது தடுக்கும் முயற்சியிலே ஈடுபட்ட காரணத்தினாலேதான் அன்றைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டி வந்தது. எதிர்க் கட்சித் தலை வர் அவர்களுக்கு எல்லா மரியாதையையும் கொடுத்து, அவர் சொன்னபடி விவாதம் வேண்டும் என்று கேட்டவுடன், விவா தத்திற்கு அனுமதித்ததற்குப் பிறகும் எதிர்கட்சித் தலைவருக்கு எந்த மரியாதையும் இல்லை என்று வெளியிலே சொல்லியிருப்பது நியாயமா எனக் கேட்க விரும்புகிறேன். அதற்குப் பிறகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே என்ன செய்தார் என்பதும் உங்களுக்குத் தெரியும். இதுவரை யிலும் இந்தப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் கோஷம் இட்டார் என்ற வரலாறே இல்லை. முதன் முத லாக எதிர்க் கட்சித் தலைவரே கோஷமிட்டு, அதன் காரண மாக நான் வெளியேற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டு அன்றைக்கு வெளியேற்றினேனே தவிர வேறு எந்த வகை யிலும் பேரவை விதிமுறைகளுக்கோ, அரசியல் சட்ட விதி முறைகளுக்கோ புறம்பாக எந்தக் காரியத்திலேயும், பேரவைத் தலைவர் அன்றைக்கு ஈடுபடவில்லை. வேறு ஏதோ, எங் கோ இருக்கிற கோபத்தை இந்தப் பேரவைத் தலைவர் மீது காண்பித்து வெளியே தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். வெளியிலே பேசிக்கொண்டிருக் கிறார்கள். நாட்டிற்குத் தெரிய வேண்டும் என்பதற் காகத்தான் இந்த விளக்கத்தைச் சொல்லியிருக்கிறேன்.

தீர்மானம் நிறைவேறியிருக்கிற முறையை இப்போது பார்த்தீர்கள். இதே முறையிலேதான் அன்றைக்கு நிறை வேறியது. அவர்கள் சொல்லிக் கொண்டிருப்பது, சட்ட முன்வடிவு நிறைவேறுகிற முறையைப் பற்றி. இனி அடுத்து வருகிற 2, 3 சட்டமுன்வடிவுகள் எப்படி நிறைவேற்றப் படும் என்பதை அப்போதும் பார்க்கலாம். வாத்தியார் வேலை பார்ப்பதுபோல, இந்த விஷயத்தைப் பேரவை யின் மூலம் அவர்களுக்கும் தெரிவித்துவிட்டேன்.